# **IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
## **Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
## **District Munsif, Arni.**
## **O.S.3/2017**

2025=ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.1 கெஜலட்சுமி வயது 61 க/பெ ஜெயராமன்**

**நேரம் - 12.55**

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கை எனக்கு எதிராக வாதி சரவணன் மற்றும் செல்வகுமார் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். ஜெயராமன் என்பவர் என் கணவர் ஆவார். முதல் பிரதிவாதி என் மகன் என்றால் சரிதான். 4 மற்றும் 5 பிரதிவாதிகளாகிய கோவிந்தராஜ், சம்பத் ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படி 4 மற்றும் 5 பிரதிவாதிகள் எனக்கு உறவுமுறை என்றால் சரிதான். என்ன உறவுமுறை என்றால் சித்தப்பா உறவு முறை ஆவார்கள். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் தயாரித்தார்கள் என்றாலும், அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் நான் 4 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 15.07.1994ம் தேதி என் கணவர் ஜெயராமன் கிரையம் பெற்ற அசல் கிரைய பத்திரத்தையும், அதேப்போல் 18.07.1994 அன்று என் கணவர் ஜெயராமன் கிரையம் பெற்ற அசல் மற்றொரு கிரைய பத்திரத்தையும், 20.10.2016 அன்று செய்யார் சார் ஆட்சியர் அனுப்பிய அழைப்பாணை, 13.02.2016 அன்று ஆரணி தாலுக்கா காவல் நிலையத்தில் வழங்கிய மனு ரசீது ஆகிய 4 ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இதை தவிர்த்து வேறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. எனக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிகள் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதிகள் இடம் அவர்களுக்கு சொந்தம் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விவரம், மற்றும் ஜக்பந்திகள், சர்வே எண் மற்றும் நீளம், அகலம் ஆகிய விவரங்களை என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதிகள் இருவருக்கும் அவர் தந்தை தேவேந்திரன்

தானசெட்டில்மெண்ட் மூலமாக வழக்கு சொத்தை எழுதி வைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சாட்சி தன்னிச்சையாக மேற்படி சொத்தை நாங்கள் வாங்கியது உண்மை என்று கூறுகிறார்.

4. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2ல் உண்மையில் தாவா சொத்து மற்றும் அதன் பக்கத்தில் உள்ள மனைகளானது தெற்கு பக்கம் பொது சந்து பார்ப்பதுபோல் 5 மனைகளாக உள்ளது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேப்போல் ஒவ்வொரு மனையும் வடக்கு தெற்கு 30 அடி நீளம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 5 மனைகளுக்கு மேற்குபுறம் பஜனை கோயில் தெரு உள்ளது என்றால் சரிதான். முதல் மனையானது ராஜேந்திரன் த/பெ முத்தன் (எ) முனுசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5. மேற்படி முதல் மனை ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அவர் அதை யாரிடம் எப்போது கிரையம் பெற்றார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், அதைப் பற்றி எனக்கு தெரியாது. ராஜேந்திரன் பெயரில் உள்ளது என்பதற்கு கிரைய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பஜனை கோயில் தெருவிற்கு கிழக்கு பக்கம் உள்ள முதல் மனை ராஜேந்திரனுக்கு பாத்தியப்படவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது.

6. உண்மையிலேயே பஜனை கோயில் தெருவிற்கு கிழக்கு பக்கம் உள்ள முதல் மனை ராஜேந்திரனுக்கு பாத்தியப்பட்டிருந்தால் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் இல்லை. அதேப்போல் அந்த முதல் மனை கிழக்கு மேற்கு 15 அடி, வடக்கு தெற்கு 33 அடி மொத்தம் 495 சதுர அடி மனை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அதுப்போல் அளவு ஏதுமில்லை என்றாலும், நான் தோராயமாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேப்போல் ராஜேந்திரன் மனைக்கு கிழக்கு பக்கம் உள்ள 2வது மனை அண்ணாமலை பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7. உண்மையிலேயே பஜனை கோயில் தெருவிற்கு கிழக்கு பக்கம் உள்ள 2வது மனை அண்ணாமலை பிள்ளைக்கு பாத்தியப்பட்டிருந்தால் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அண்ணாமலை பிள்ளைக்கு பாத்தியப்பட்ட

சொத்திற்கான பத்திரம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்வது பொய் என்றாலும் மேற்படி எனது தரப்பு 4 ஆவணங்களில் மேற்படி ஆவணம் உள்ளதா என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து விட்டு அதைப் பற்றி எனக்கு தெரியாது என்று கூறினார்.

8. அண்ணாமலை பிள்ளையாரிடமிருந்து என் கணவர் வாங்கிய கிரைய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன், ஆனால் அண்ணாமலை வாங்கிய கிரைய பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் என் கணவர் இறந்து விட்டார், எனக்கு அதைப் பற்றி தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அண்ணாமலை பிள்ளைக்கு எப்படி உரிமையானது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவர் வாங்கியிருப்பார். அவர் யாரிடம் எந்த வருடம் கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. பஜனை கோயில் தெருவுக்கு கிழக்கு பக்கம் உள்ள 2வது மனை அண்ணாமலை பிள்ளைக்குரியது என்று ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1ல் உள்ள சொத்து விவரத்தில் முனுசாமி நாயுடு வீட்டிற்கு கிழக்கு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பி.வா.சா.ஆ.1ல் உள்ள ஜக்பந்தியில் முத்தன் (எ) முனுசாமி நாயுடு வீட்டிற்கு கிழக்கு என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. ஜக்பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு முத்தன் (எ) முனுசாமி நாயுடு கிழக்கில்தான் உள்ளார் என்பதை நிரூபிக்க அவருடைய வாரிசுதாரர்கள் யாரையாவது சாட்சியம் அளிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை.

10. இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கு தெற்கு பக்கம் பொது சந்து உள்ளது என்றால் சரிதான். என் கணவர் எப்போது காலமானார் என்றால் 2009ம் வருடம் காலமானார். அதற்கான இறப்பு சான்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

**வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் 1.35**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,Arni